பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 05 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகம், கேரளம் உள்ளிட்ட ஐந்து சட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
2. சுயசார்பு உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்க முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.
3. பிரசார் பாரதியின் தலைவராக திரு **Prasoon Joshi**-ஐ, தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் நியமித்துள்ளது.
4. **Hormuz** நீரிணை வழியாக கப்பல்கள் செல்வதற்கு ஈரானுக்கு கட்டணம் செலுத்தும் கப்பல் நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.
5. தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஃபிரான்ஸை எதிர்கொள்கிறது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>>>

தமிழகம், கேரளம், மேற்குவங்கம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் நாளை மறுநாள் எண்ணப்படுகின்றன.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**தமிழகத்தில் 234** தொகுதிகளில் கடந்த மாதம் 23-ஆம் தேதி நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

நாளை மறுநாள் 62 வாக்கு எண்ணும் மையங்களில் காலை 8 மணிக்கு முதலில் தபால் வாக்குகளும், பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும் எண்ணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கேரளத்தில் 140** தொகுதிகளுக்கு கடந்த மாதம் 9-ஆம் தேதி நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு Rathan Kelkar தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் 43 வாக்கு எண்ணும் மையங்களில் காலை எட்டு மணிக்கு வாக்கு எண்ணும் பணி தொடங்க உள்ளதாக தெரிவித்தார்.

வாக்கு எண்ணும் பணியில் **15** ஆயிரத்து **465** அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்.

முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படும் என்றும், பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும் என்றும் திரு **Rathan Kelkar** தெரிவித்தார்.

**அஸ்ஸாமில் 126** சட்டப்பேரவைத் தொகுதிகளில் கடந்த மாதம் **9-**ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு **Anurag Guel** தெரிவித்துள்ளார்.

மாநிலம் முழுவதும் **40** வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வாக்கு எண்ணும் பணியில் **5** ஆயிரத்து தொள்ளாயிரத்து **81** அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**மேற்குவங்க** மாநிலத்தில் வாக்கு எண்ணிக்கையை கண்காணிக்க கூடுதலாக பொதுப் பார்வையாளர்கள், காவல்துறை பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட 77 காவல்துறை பார்வையாளர்களுடன், கூடுதலாக 165 பார்வையாளர்கள் நியமிக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

வாக்கு எண்ணிக்கை சீராக நடைபெறவும், சட்டம் — ஒழுங்கு பாதுகாக்கப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த பார்வையாளர்கள் மேற்கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத் தன்மையுடன் அமைதியாக வாக்கு எண்ணிக்கை நடைபெறுவது உறுதி செய்யப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்கு எண்ணும் அறைகளுக்குள் காவல்துறை பார்வையாளர்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்கள், வேட்பாளர்கள் மற்றும் முகவர்களுக்கு தேர்தல் ஆணையத்தின் இணையதளம் மூலமாக வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ECINET** செயலி மூலமாக புகைப்படம் மற்றும் **QR Code** கொண்ட இந்த அடையாள அட்டைகள் இருந்தால் மட்டுமே வாக்கு எண்ணும் மையங்களுக்குள் அனுமதிக்கப்படுவர் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>>>

மேற்குவங்கத்தில், **2** சட்டப்பேரவை தொகுதிகளுக்கு உட்பட்ட **15** வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு இன்று நடைபெற்றது.

**Magrahat Paschim** சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட **11** வாக்குச்சாவடிகளிலும், **Diamond Harbour** சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட **4** வாக்குச்சாவடிகளிலும் மாலை **6** மணிவரை வாக்குப்பதிவு நடைபெற்றது.

மாலை ஐந்து மணி நிலவரப்படி, **87** சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

<<<<<>>>>>>>>

சுயசார்பு உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்க முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் சூரத்தில் மண்டல மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் உற்பத்தித் திறனை மேம்படுத்த முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

இந்த மாநாட்டில் 3 லட்சத்து 53 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 2 ஆயிரத்து 292 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

<<<<<>>>>>>>>>

பிரசார் பாரதியின் புதிய தலைவராக திரு பிரசூன் ஜோஷியை, தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் நியமித்துள்ளது.

தகவல் தொடர்பு நிபுணரான திரு ஜோஷி, திரைப்படத் துறையில் பல்வேறு படைப்புகளை செய்துள்ளார்.

அவரது நியமனம் குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், திரைப்படம், இலக்கியம், விளம்பரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஆக்கப்பூர்வமாக செயலாற்றியவர் ஜோஷி என்று குறிப்பிட்டார்.

நாட்டின் கலாச்சாரத்தை மக்களிடையே எடுத்துச் செல்லும் பிரசார் பாரதியில், அவரின் தலைமை பங்களிப்பு முக்கிய பங்காற்றும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>>>

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் அனைத்து ஊடகப்பிரிவுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேணடும் என்று அமைச்சக செயலர் திரு **Chanchal Kumar** தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம் பாட்னாவில பத்திரிகை தகவல் அலுவலகம், மத்திய தகவல் தொடர்பகம், ஆகாஷ்வாணி, தூர்தர்ஷன் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>>>

பீகாரில் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முதல் கட்டம் இன்று தொடங்கியது.

வீடுகள் தொடர்பான தகவல்கள் சுயபதிவேற்றம் செய்வதற்கான கால அவகாசம் நேற்றுடன் முடிவடைந்ததையடுத்து, இன்று முதல் அலுவலர்கள் வீடு வீடாக சென்று கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த கணக்கெடுப்புப் பணி வரும் **30-**ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்புத் தொடர்பான பயிற்சி பெற்ற அலுவலர்கள் வீடுகளுக்கு சென்று விவரங்களை சேகரித்து வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் இரண்டாம் கட்டம் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்க உள்ளது.

இரண்டாவது கட்டத்தில் வயது, கல்வித்தகுதி, வேலை, பாலினம் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் சேகரிக்கப்பட உள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முதல் கட்டம் வரும் 22-ஆம்தேதி தொடங்க உள்ளதாக அம்மாநில தலைமை மக்கள் தொகை அதிகாரி திருமதி ஷீத்தல் வர்மா தெரிவித்துள்ளார்.

லக்னோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வீடுகள் தொடர்பான தகவல்கள் வரும் 7-ஆம் தேதியிலிருந்து இணையதளத்தில் சுயபதிவேற்றம் செய்யலாம் என்றும் கூறினார்.

வீடுகள் தொடர்பான தகவல்கள் அடுத்த மாதம் 20-ஆம் தேதிவரை சேகரிக்கப்படும் என்றும் திருமதி ஷீத்தல் வர்மா தெரிவித்தார்.

<<<<<>>>>>>>>

**Hormuz** நீரிணை வழியாக கப்பல்கள் செல்வதற்கு ஈரானுக்கு கட்டணம் செலுத்தும் கப்பல் நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது

இந்த நீரிணை வழியாக கப்பல்கள் செல்வதற்கு அமெரிக்காவும், ஈரானும் கட்டுப்பாடுகள் விதித்ததையடுத்து அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் தாக்குதல் நடத்திய பின் **Hormuz** நீரிணை வழியாக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ஈரான் கடல் பகுதி வழியாக கப்பல்கள் செல்ல கப்பல் நிறுவனங்களிடமிருந்து ஈரான் சுங்கக்கட்டணம் வசூலித்து வருகிறது.

கடந்த ஏப்ரல் **13**-ஆம் தேதி ஈரான் நாட்டின் கப்பல்களுக்கு அப்பகுதியில் அமெரிக்கா தடை விதித்துள்ளது.

இதனையடுத்து, **45** வணிக கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>>>

பாகிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தானை சேர்ந்த அகதிகளை வெளியேற்றும் நடவடிக்கைக்கு ஐ நா குழு கவலை தெரிவித்துள்ளது.

குழந்தைகள் உள்ளிட்ட அகதிகளை பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றியதாக கண்டறிந்ததையடுத்து, இதுதொடர்பாக, விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று ஐ நா குழு வலியுறுத்தியுள்ளது.

பாகிஸ்தான் காவல்துறையினர் அகதிகள் மீது தாக்குதல் நடத்தியதாக வரும் தகவல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>>

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் **21** தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் காவல்துறையினர், தீவிரவாத தடுப்புப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், **Tehreek-e-Taliban** அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக வந்த தகவலையடுத்து, இந்நடவடிக்கை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஃபிரான்ஸை எதிர்கொள்கிறது.

டென்மார்க்கில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி **9.30**-க்கு தொடங்குகிறது.

-------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

-----------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் தில்லி அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி **3-2** என்ற கோல் கணக்கில், இண்டர் காசி அணியை வென்றது.

---------------

கஜகஸ்தானில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **6-4, 6-3** என்ற செட் கணக்கில், பிரான்சின் **Antoine Ghibaudo**-ஐ வென்றார்.

---------------

தில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Shruti Ahlawat** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **6-4, 6-0** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Jensi Dipakbhai** -ஐ வென்றார்.

---------------

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Madhwin Kamath — Adarwa Sharma** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-3, 6-1** என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **James Beaven —** தென்னப்பிரிக்காவின் **Marc Van** இணையை வென்றது.

**<<<<<END>>>>>>**